மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதுக்கோட்டை கோட்டத்தில் நிலவரி ஏற்பாட்டுப் பணியை விரைந்து நடத்தி இயன்ற விரைவில் அதை முடிக்கும் நோக்கத்துடன், அரசாங்கம் மேற்கொண்டும் நிலவரி ஏற்பாட்டு உதவி அதிகாரிகள் நால்வரையும் தேவையான நேரிடப்பணியாளர்களையும் நியமித்து நிலவரி ஏற்பாட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கையைப் பெருமளவிற்கு அதிகரித்துள்ளது. மேலும், நிலவரி ஏற்பாட்டு விசாரணையை நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தார்கள் நடத்துவதற்குப் பதிலாக, நிலவரி ஏற்பாட்டு உதவி அதிகாரிகளே நடத்தவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : புதுக்கோட்டை டிவிஷனில் உள்ள இனம் கிராமங்களை ரீ-செட்டில்மெண்ட் செய்வதற்கு எத்தனை அதிகாரிகள், எப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? வேலையை எப்போது ஆரம்பித்தார்கள்? எப்போது முடிவுறும்? நிலக்காரர்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவகாரம் படிப் படியாகச் செய்யப்பட்டு வருகிறது. இதுபற்றிய மசோதா சட்டமன்றத்தில் நிறைவேறியதை கனம் உறுப்பினர் மறந்திருக்க மாட்டார். இனம், மைனர் இனம் என்ற இனத்தில் முதலில் 82 கிராமங்கள் எடுக்கப்பட்டன. பிறகு பல மைனர் இனங்களையும் எடுக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்தது. செட்டில்மெண்ட் தாசில்தார் தான் இந்த வேலையைக் கவனித்தார். பிறகு 116 கிராமங்களில் உள்ள சிறிய சிறிய இனங்களையும் எடுக்கவேண்டுமென்ற கிளர்ச்சி வந்தபோது தனியாகவே அதிகாரிகள் இதற்காகப் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, புதுக்கோட்டைப் பிரதேசத்தில் இனம் கிராமங்களை எடுத்துவிடுவதற்காக ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் ஒரு அறிக்கையை இது சம்பந்தமாக அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே கண்டிருக்கின்ற பிரகாரம் எல்லாக் கிராமங்களையும் இனம் ஒழிப்பிலே கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அப்படித்தான் 114 கிராமங்களைக் கொண்டுவந்து, அதற்காக முடிவெடுத்து, இந்த மன்றத்திலே அதற்கான மசோதாவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலேகூட இது இறுதியான முடிவு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

Fishing Harbour in Tamil Nadu

* 241 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) Whether any sanction has been accorded by the Government of India for the construction of a fishing harbour in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) சென்னையிலும், தூத்துக்குடியிலும் முறையே ரூ. 388.50 லட்சம், ரூ. 208 லட்சம் செலவில் மீன் பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, சென்னையிலேயும், தூத்துக்குடியிலேயும் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த இரண்டு இடங்களிலும் மீன்பிடி துறைமுகங்கள் எப்போது கட்டிமுடிக்கப்படும்? அதன்மூலம் எவ்வளவு மீன்கள் பிடிக்கப்படும்? அதன்காரணமாக எவ்வளவு அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த இரண்டு இடங்களிலும் வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு மீன் பிடிக்கப்படும், இதனால் எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்ற விவரம் இல்லை. எந்த வகையிலே கட்டப்படும், எத்தனை இயந்திரப் படகுகள், மீன் இழுப்புப் படகுகள் ஏற்படுத்தப்படும் என்ற விவரங்கள்தான் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்கள் சொல்லலாம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்படுகின்ற இடத்திலே மீன்பிடி படகுகள், கேனூ படகுகள் இவற்றைக் கட்டுகின்ற இடம் இருப்பதால் அங்கேயுள்ள மீனவர்களுக்கு இடம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அதற்குப் பதிலாக வேறு இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. டி. மார்டின் : இந்த இரண்டு மீன்பிடி துறைமுகங்களைத் தமிழகத்திலே ஏற்படுத்துவதுபோன்று, பெரியதாழை, மணப்பாடு, உவரி, ஆலந்தலை போன்ற இடங்களிலே உள்ள மீனவர்கள் மீன் பிடித் துறைமுகம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமை இருப்பதால் அங்கேயும் சிறு மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தூத்துக்குடி, சென்னையில்தான் இப்பொழுது அமைக்கப்படுகிறது. இராமேஸ்வரத்திலே மேலும் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப் படுகிறது.

Tourist Traffic Advisory Committee

* 242 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to place on the table of the House, copy of the decisions arrived at by the Tourist Traffic Advisory Committee in its meeting held in the Nilgiris early in 1968?